தினமலர்

● வியாழன் ● பிப்ரவரி 13 2020 | சென்னை

# சதுரங்கம்: செயின்ட் ஜோசப் முதலிடம்

**சென்னை, பிப். 13–**

சென்னை மாவட்ட கல்லூரி மாணவியருக்கான விளையாட்டு போட்டி, நுங்கம்பாக்கம், எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரி சார்பில், அரும்பாக்கம், டி.ஜி. வைஷ்ணவா கல்லூரி மைதானத்தில், நேற்று முன்தினம் துவங்கியது.

இதில், கூடைப்பந்து, வாலிபால், டேபிள் டென்னிஸ் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடந்தன.

இந்த போட்டியில், சென்னையைச் சேர்ந்த கலை அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகள் என, 20க்கும் மேற்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்த மாணவியர் பங்கேற்றனர்.

இதில், நேற்று நிறைவு பெற்ற, சதுரங்க போட்டியில், செயின்ட் ஜோசப் கல்லூரி அணி முதலிடம் பிடித்தது.

இந்த போட்டியில், எத்திராஜ் கல்லூரி அணி இரண்டாம் இடமும், பெண்கள் கிறிஸ்டியன் கல்லூரி அணி மூன்றாம் இடமும் பெற்றன.

கூடைப்பந்து போட்டியில், இந்துஸ்தான் பல்கலை அணி முதலிடம் பெற்றது.

இதில், எஸ்.ஆர்.எம்., பல்கலை அணி இரண்டாம் இடமும், எத்திராஜ் கல்லூரி அணி மூன்றாம் இடமும் பிடித்தன.